1970 நவம்பர் 28]

காஜாமலையில் சந்தன மரங்கள்

*59 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஜாமலைப் பகுதிகளில் உள்ள சந்தன மரங்களை அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள படுகை நிலங்கள்

*60 வினா—திரு. வை சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள காட்டிலாக்காவை சேர்ந்த படுகை நிலங்கள் எத்தனை?

(இ) அவைகள் தற்போது அரசின் மேற்பார்வையின் கீழ் உள்ளனவா?

(உ) அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) (1) ஒதுக்கக் காடு படுகை நிலங்கள் 21 இடங்களில் உள்ளன. அவற்றின் பரப்பு 1331.46 ஹெக்டார்கள்.

(2) ஒதுக்க நிலப்படுகை நிலங்கள் 30 இடங்களில் உள்ளன. அவற்றின் பரப்பு 1410.78 ஹெக்டார்கள்.

(இ) & (உ) அவைகள் தற்போது காட்டிலாகாவின் மேற்பார்வையில் உள்ளன. அவைகள் விவசாயம் செய்வதற்குக் குத்தகைக்கு விடப்படவில்லை.

திரு. ஆர். கருப்பையா : திருச்சி மாவட்டத்திலுள்ள இந்தக் காடுகளில் அரசாங்கம் ஏதாவது மரங்கள் பயிர் செய்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சவுக்கு, தேக்கு போன்ற மரங்களை காட்டு இலாகா பயிரிட்டு வருகிறார்கள்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : இந்தக் காட்டு இலாகாவிற்குச் சொந்தமான நிலங்கள் பலயிடங்களில் சாகுபடிக்கு இலாயக்கில்லாத பூமியாக இருக்கின்றன. அந்தயிடங்களில் காடுகள் வளருவதில்லை. ஆகவே இந்த நிலங்களை நிலமற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கத்தால் ஏதாவது திட்டமிடப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : காவேரிக் கரை படுகை நிலங்களைப் பற்றிய கேள்வி இது. அந்த நிலங்கள் பாதுகாக்கப்பட்டால்தான் காவேரிக் கரை முதலில் பாதுகாக்கப்படும் என்பதற்காக காவேரிக் கரை ஓரங்களில் உள்ள படுகைகளை குத்தகைக்கு விடுவதில்லை. நாங்களே பராமரித்து வருகிறோம்.

[1970 நவம்பர் 28

திரு. முனு ஆதி : மக்கள் பெருக்கத்தை முன்னிட்டும், விவசாயிகள் பலர் நிலம் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருப்பதை முன்னிட்டும் காட்டு இலாகா நிலங்களை விவசாயிகளுக்குத் தருவதற்கான யோசனையிருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லிய திட்டத்தையொட்டி உபயோகப்படாத காட்டு இலாகா நிலங்களை விவசாயிகளுக்குத் தருவதற்காக அரசாங்கம் எண்ணம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், நானும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் உத்தரவின்படி காட்டு இலாகா நிலங்களை விவசாயத்திற்கு தகுதிபடைத்த ஒதுக்கம் இல்லாத காட்டு இலாகா நிலங்களை விடுவதற்காக இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) மழை, புயல் இவற்றினால் ஏற்பட்டுள்ள சேதம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. விநாயகம், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. எம். பூபதி, திரு. கோ. பாரதி மோகன், திரு. ஆ. கு. சுப்பையா, திரு. சோ. அழகர்சாமி, திரு. கே. பி. எஸ். மணி, திருமதி கே. பி. ஜானகியம்மாள், திரு. க. இராமமூர்த்தி, திரு. கொ. இர. ஞானசம்பந்தன், திரு. சி. கோவிந்தராசன், திரு. என். எஸ். வி. சித்தன் ஆகிய உறுப்பினர்கள்

' Havoc caused by the heavy rain and cylone in Tamil Nadu with particular reference to Thanjavur, Chingleput, South Arcot Districts, Madras City etc. '

என்ற பொருள் குறித்து விவாதம் செய்வதற்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு உறுப்பினர்களும் இதற்கான காரணங்களை......... ......

திரு. கே. விநாயகம் : தாங்கள் அனுமதித்தால் அதன் தனித் தன்மையைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு பேர்களும் பேசுவது என்றால்.........

திரு. கே. விநாயகம் : விதியை திருத்தியமைக்கப் போகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சிக்கு ஒருவராகப் பேசலாம். திரு. விநாயகம் அவர்களை முதலில் அழைக்கிறேன்.